# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஓகத்து மாதம் 24 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 64 /2006

## 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்கச் சட்டத்தில் 34அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** இரண்டாயிரமாம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 34 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 34அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :—

*"குறித்த சில பதிவு செய்யப் பட்ட நிதி குத்தகைக்கு விடும் தாபனங்கள் தனிசுச் சாதனங்களின் வழங்கீட்டின் மூலம் கடனெடுத்தல்.*

34அ. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (இ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டதும் —

(அ) அதன் சார்பில் வழங்கப்பட்ட அறிவித்தல் மூலம் பணிப்பாளரால் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகைக்குக் குறையாத தணிக்கப்படாத, வழங்கப்பட்டதும் செலுத்தப் பட்டதுமான மூலதனமொன்றைப் பேணுகின்றதும் பகிரங்கக் கம்பெனியொன்றாக இருக்கின்றதுமான ஒரு பதிவுசெய்யப் பட்ட நிதி குத்தகைக்குவிடும் தாபனமொன்று ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீட்டினால் ; அல்லது

(ஆ) (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குக் குறையாத தணிக்கப்பட்டாத,

வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனமொன்றைப் பேணுகின்றதும் பகிரங்கக் கம்பெனியொன்றாக இருக்கின்றதுமான ஒரு பதிவு செய்யப்பட்ட நிதிகுத்தகைக்குவிடும் தாபனமொன்று தனியார் முன்வைப்புகளினூடாக ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீட்டின் மூலம்,

பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் பணத்தைக் கடனெடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்கு, பணிப்பாளரின் அங்கீகாரம் அந்நோக்கத்திற்கென பணிப்பாளருக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்கு விடும் தாபனத்தினால் பெறப்படுதல் வேண்டும் என்பதுடன், அளிக்கப்படும் ஏதேனும் அங்கீகாரம், அவசியமானதெனப் பணிப்பாளர் கருதக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைந்ததாகவும் இருக்கலாம்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்கு —

"தனிசுச் சாதனம்" என்பது, ஒரு தொகுதிக்கடன், முறி, வாக்குறுதிப்பத்திரம் அல்லது பணிப்பாளரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் தனிசுச் சாதனம் எனப்பொருள்படும் ; அத்துடன்

"தனியார் முன்வைப்பு" என்பது, விவரத் தொகுப்பொன்றின் வழங்கீடோ அல்லது இணையம், அஞ்சல், தொலைநகல், இலத்திரனஞ்சல், கைத்துண்டுகள், ஒட்டுப் பதாதைகள், சுவரொட்டிகள் அல்

லது புத்தகங்கள் உட்பட பொதுசன ஊடகத்தின் ஊடக விளம்பரமோ அல்லது எத்தன்மையதுமான ஏதேனும் வழிமுறைகளால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் விதமான பிரசாரமோ இல்லாமல் ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீடு என்று பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுகின்ற விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*